ராணி காமிக்ஸ்
முகமூடி வீரர் மாயாவி
குலை நடுங்க வைக்கும்
தங்கக் காளை
ரூ.5

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளி தோறும்

சிறுவர் தங்கமலர்

- ★ அட்டையில் உங்கள் குழந்தையின்படம்
- ★ புராண படக்கதை
- ★ துப்பறியும் படக்கதை
- ★ குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
- ★ மாயாஜால சிறுவர் தொடர்கதை
- ★ சிறுகதைகள்
- ★ பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளி தோறும் வண்ண புத்தகம் இலவசம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்

ராணி காமிக்ஸ் – 442
(மாதம் இருமுறை இதழ்)

நவம்பர் 16 – 30
2002

முகமூடிவீரர் **மாயாவி**
தோன்றும்

தங்கக் காளை


காலம் எவ்வளவோ மாறிவிட்டது.
காடுகள் நகரங்கள் ஆகிவிட்டன.
நகரங்களில் டென்னிஸ் மைதானங்கள், நீச்சல் குளங்கள்.
நகரங்களுக்கு வெகு தூரத்தில் இன்றும் காடுகளும் இருக்கத்தான் செய்கின்றன.


அப்படி ஒரு காட்டில் வாழும்
வம்பேசிப் பழங்குடி மக்கள்


மாடு மேய்க்கும் லோங்கோ
இன மக்கள்.


துணி நெய்யும் ஊகன் இன மக்கள்.
இவர்கள் எல்லோரும் அப்பாவிகள்.
அமைதியானவர்கள்.

காடுகளைத் தாண்டி ஒரு மலை. அந்த மலையில் திரங்கி இன மக்கள் வாழ்ந்தார்கள். இவர்கள் நாகரிகம் இல்லாத முரடர்கள். இவர்களை 'தலைவெட்டிக் கூட்டம்' என்று மற்றவர்கள் சொல்லுவார்கள்! அவர்களைப் பற்றிய கதைதான், இது.
ஒரே வெட்டு!
தாத்தா! தலையை வெட்டும் மலைவாசிகள் இப்போதும் இருக்கிறார்களாமே?
நரமாமிசம் சாப்பிடுகிறவர்கூட இருக்கிறார்கள், ரெக்ஸ்!
வேறு இனத்தவர்களின் தலைகளை திரங்கிகள் வெட்டிவிடுவார்கள்!
மெய்யாவா தாத்தா?

தலையை வெட்டு! சுட்டுத் தின்னலாம்!!
அவர்களைத் திருத்த ஒருமுறை மாயாவி போனார்!
உங்கள் தலைகளைக் கிள்ளி எடுக்கிறேன்! எப்படி இருக்கிறது என்று பாருங்கள்!!



கொஞ்ச நாள் தலை வெட்டுவதை நிறுத்தியிருந்தார்கள்!
தாத்தா சொல்லுவதைப் பார்த்தால், மீண்டும் தொடங்கிவிட்டார்கள் போலிருக்கிறதே!
வம்பேசிகள் நல்லா சாப்பிட்டுக் கொழுத்துப் போயிருக்கிறார்கள்!
லோங்கோக்களும் அப்படித்தான்!
ஒரு நாள் நம்ம கையில் சிக்குவார்கள்!

அடிக்கடி மோதல் ஏற்பட்டது!
மாயாவி தலையிட்டு அமைதி ஏற்படுத்தினார்.
நாம் எல்லோரும் சகோதரர்கள். நமக்குள் சண்டை வேண்டாம்!


திரங்கிகள் எங்கே?
நான் போய்ப் பார்த்து வருகிறேன்!
அவர்கள் தலைவெட்டி கொலை பாதகர்கள்! நானும் துணைக்கு வாரேன்!

நாம் கூட்டமாகப் போவது பாதுகாப்புதான்!

மலைக்கு வந்தார்கள்.
சமாதானமாக இருப்போம் என்று இவர்கள் தங்கக் காளை மீது உறுதி எடுத்திருக்கிறார்கள்.
நீங்களும் உறுதி எடுக்க வேண்டும்!

மாவீரர்கள் நாங்கள்! தூசிகளுடன் உடன்பாடா? தூ!

தங்கத்தில் செய்யப்பட்ட காளை.
இதுவே நமது சமாதான சின்னம்!
சமாதானமாக இருப்போம் என்று கூறி, காளை மீது அம்பு எய்துங்கள்!
சண்டையிட மாட்டோம்!
அமைதி காப்போம்!
திரங்கிகளைக் காணோமே?
சமாதானமாக இருப்போம்!
ஒற்றுமை ஓங்கட்டும்!

ஏமாற்றத்துடன் திரும்பினார்கள்.
நாம் தூசியாம்!
நாம் யார் என்று அவர்களுக்குக் காட்ட வேண்டும்!
கோபம் வேண்டாம்!
சண்டையில்லாது சமாதானமாக இருப்போம் என்று தங்கக்காளை மீது எல்லோரும் உறுதி எடுத்திருக்கிறீர்கள்.
திரங்கிகள் உடன் படவில்லையே!
அவர்கள் தாக்க வந்தால் என்ன செய்வது?
அப்போது என் உதவி உங்களுக்கு உண்டு!
தங்கக்காளையால் காட்டில் அமைதி ஏற்பட்டது.
வம்பேசி ஊக்கத்துடன் உழுது பயிர் செய்தார்கள்!

லோங்கோ பயமின்றி ஆடு மாடு மேய்த்தார்கள்.
மோரிகள் ஏராளமாக மீன் பிடித்தார்கள்!
திரங்கிகள் இன்னும் கொள்ளைக் கூட்டமாகவே அலைந்தார்கள்!
ஆனால், சமவெளியில் சமாதானம் நிலவியது!
நகையணிந்த பெண்கள் நள்ளிரவில் கூடப் பயமில்லாமல் நடமாட முடிந்தது!

மக்கள் நன்கு உண்டு செழிப்பாக வாழ்ந்தார்கள்!
எல்லாம் கொழுத்து விட்டார்கள்!
கொழுப்பு எல்லாம் நமக்குத்தானே!!
இதுதான் தங்கக் காளையா, மாமா?
ஆமாம், ரெக்ஸ். இதனால்தான் இன்று காட்டில் அமைதி நிலவுகிறது!
இனிமேல் நீ படிப்பில் கவனமாக இரு.
சரி, மாமா.

மாயாவிக்கும் ஓய்வு!
காடு இப்படி அமைதியாக இருந்தால், எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறது!
திரங்கிகள் மட்டும் மாறவில்லை. அவர்கள் பிணந்தின்னிக் கழுகுகள்!
காட்டு வழியே ஒரு பயண வண்டி வந்தது!
தலையை வெட்டு!
கொள்ளையடி!!

நமக்கு ஏன் வம்பு? தலைவெட்டிகள் பகையே வேண்டாம்!
அவர்கள் கொலைகாரப் பாவிகள்!
நாம் தலையிடாமல் இருப்பது தான் நல்லது!
மலையில் நம்மை எதிர்க்க ஆள் இல்லை!
தங்கக் காளை கறுக்கத் தொடங்கியது!
முதலில் ஊகன்களை வேட்டையாட வேண்டும்!
அவர்களிடம் நல்ல பணம் இருக்கிறது!

இன்றைக்கு நல்ல வேட்டை!
ஆமா!
செய்தி பறந்தது!
திரங்கிகள் வேலைதானா?
ஆமாம்! தலை வெட்டிகளின் வேலையே! பாவம், பயணிகள்!
மாயாவிக்குத் தகவல் அனுப்ப வேண்டும்!
மாயாவி காட்டில் இல்லையே!
நாம் மட்டும் என்ன செய்ய முடியும்?

ஊகன்களைத் தாக்க திரங்கிகள் கிளம்பினார்கள்!
வம்பேசி தலைவரே! திரங்கிகள் எங்களைத் தாக்கி, பலபேரை கைதிகளாகப் பிடித்துப் போய்விட்டார்கள்.
அதே நேரம் உயிர் தப்பிய பயணிகள்.
பாதர்! நீங்கள்தான் எங்களைக் காப்பாற் வேண்டும்!
செய்தி பறந்தது!
திரங்கித் தலைவெட்டிகள் ஊகன்களைத் தாக்கிக் கொலை! கொள்ளை!!
அப்போது மாயாவி நகரத்தில் இருந்தார்.
உலகச் செய்தி
ஊகன்கள் மீது திரங்கிகள் தாக்குதல்! நூற்றுக்கணக்கான தலைகள் தரையில் உருண்டன!!

மாயாவி உடனே கிளம்பினார்.
விமானம் தயாரா இருக்கிறது!
நாயை அழைத்து வருகிறாரே!
மாயாவி காட்டுக்கு வந்து சேர்ந்தார்.
உங்கள் உதவிக்கு மிகவும் நன்றி!
சரியான நேரத்தில் வந்து விட்டீர்கள்!
பயங்கரத் தாக்குதல் நடந்திருக்கும் போலிருக்கிறதே?

பல நூறு தலைகளை வெட்டினார்கள்! ஏராளமான பேரை அடிமைகளாகப் பிடித்துப் போனார்கள்!
அதே நேரம்—
அடுத்தது யார்? மோரி! அவர்களிடம் நிறையப் பணம் இருக்கிறது!
ஆ...! திரங்கிகள்!!
திரங்கிகள் கொள்ளைக் கூட்டம் மோரிகளைத் தாக்கப் போகிறது!

அவர்களைக் காப்பாற்றியாக் வேண்டும்!
உலகன்களைப் போல இவர்களும் பலியாகி விடக் கூடாது!
வம்பேசிகளிடம் வந்தார்.
தலைவரே! திரங்கிகளை அடக்கி வைக்க வேண்டும்!
அவர்கள் கொலைகாரர்கள்
இப்போது மோரிகளைத் தாக்கப் போகிறார்கள்! அச்சோ!!
அடுத்த குறி நாங்களாகத்தான் இருக்கும்!

மோரிகளுக்கு உதவப் போய் நாங்கள் அழிந்துவிடக் கூடாதே!
இப்போதே வம்பேசிகள் வேட்டையாடித்தான் பிழைக்கிறார்கள்!
இராமங்களில் பெண்கள், குழந்தைகள் மட்டுமே இருக்கிறார்கள்

கொலைகாரர்களை அடக்க நீங்கள் ஒருவர் போதுமே மாயாவி!
உங்களையும் தயார்ப்படுத்த நினைத்தேன்!
திரங்கிகள் கடற்கரைக்கு வந்துவிட்டார்கள்.
அதே நேரம் மாயாவியும் வந்தார்.
வாங்க மாயாவி!
!!

திரங்கிகள் உங்களைத் தாக்க வருகிறார்கள்!
திரங்கிகளா... அய்யோ... நாங்கள் கடலுக்குள் பாய்ந்து பதுங்கவேண்டியதுதான்!
எத்தனை நாள் கடலில் இருப்பீர்கள் எதிர்த்து நில்லுங்கள்
எங்களிடம் ஆயுதம்கூட இல்லை! வலையும், மீன் குத்தும் சூலமுமே இருக்கின்றன!
அந்த இரண்டுமே போதுமே!

திரங்கிகள் தாக்குதலுக்குப் பாய்ந்து வந்தார்கள்!
தலையை வெட்டு!
கொள்ளைக்காரர்கள் வருகிறார்கள்!
வலைகள். சூலத்துடன் மோரிகள் தயாராக!

கடலுக்குப் போனவர்களும் திரும்பட்டும்! எல்லாரையும் சூறையாடிவிடுவோம்!
மோரிகள் வலைகளை விரித்துத் தயார் ஆனார்கள்!
நான் சொன்னபடி செய்யுங்கள்!

திரங்கிகள் வலையில் சிக்கினார்கள்.
மோரிகள் வலைகளை இழுக்க, நன்றாக மாட்டிக்கொண்டார்கள்!
மாயாவியின் துப்பாக்கியும் அதிர்ந்தது!

வலையிலிருந்து தப்பிக்கத் திரங்கிகள் முயற்சித்தார்கள்!
!!
தப்பியவர்கள் ஓட்டம் பிடித்தார்கள்!
!!
அவர்களை உயிரோடு விடக்கூடாது!
வெற்றி! வெற்றி!! நல்ல பாடம் கற்பித்தீர்கள்!
வெற்றிக்கு உங்கள் யோசனைதான் காரணம்!

எதிர்த்து நின்றால் எந்தத் திறமையையும் அழிக்க முடியும்!

திரங்கிகள் மலைக்குத் திரும்பினார்கள்.
நம்மைப் பார்த்து எல்லா இனங்களும் சிரிக்கின்றன!

இத்தனைக்கும் மாயாவிதான் காரணம்!

மாயாவிதான் நமது முதல் எதிரி! எப்படியும் அவனை அழிக்க வேண்டும்!

அவன் ஒரு மாயாவி! அவனை அழிப்பது கடினம்!
ஏதாவது வழி இருக்கும்! அதைக் கண்டுபிடிப்போம்!

அதே நேரம்—
மிஸ்... காமா! டாம் குளிக்கக் கூப்பிடுகிறான்!
!

சீக்கிரம் திரும்பிவிடுங்கள், ரெக்ஸ்!
உடனே திரும்பி விடுவோம்!
ஒரு குளத்தில் நீந்திக் குளித்தார்கள்.
திரங்கன் ஒருவன அவர்களைப் பார்த்தான்.
மாயாவிக்கு ஒரு வளர்ப்பு மகன் இருக்கிறான்.
ஊருக்கு வெளியில் உள்ள குளத்துக்குக் குளிக்க அவன் வருகிறான்! அவனைப் பிடித்தால் மாயாவியை மடக்கிவிடலாம்!

திரங்கிகள் ரெக்சைப் பிடித்துப் போனார்கள்!
?!
கத்தினால், கொன்று விடுவேன்!
சிங்கம் பாதி வழியில் நின்றுவிட்டது!
சிங்கம் திரும்பி வந்தது. ரெக்ஸ் எங்கே? சிங்கம் விழித்தது!
டாமுவைத் தூக்கிக்கொண்டு யானை ஜும்பா நடந்தது!
மாயாவியின் குகையை நோக்கிச் சென்றன.


டாமுடன் குளிக்கப் போனான்!
டாம்! என்ன ஆச்சு?
திடீர்னு யாரோ என்னைக் கீழே தள்ளிவிட்டாங்க.
ரெக்ஸ் எங்கே?

அதேநேரம்... திரங்கிகள் மலையில்—
முதலில் முடியை வெட்டு!
அடுத்துத் தலை!
உன் அப்பனுக்கு ஒரு கடிதம் எழுது!
?
ரெக்சை மீட்க நான் கிளம்புகிறேன்!
நாங்களும் வர்றோம்!

தாக்குதல் நடந்த இடத்துக்கு மாயாவி வந்தார்.
கட்டனோ மானைத் துரத்த, அதேநேரம் டாமைக் கீழே தள்ளியிருக்கிறார்கள். அவன் நினைவு இழந்து விட்டான்.
இது சதிதான்! கட்டனோவைப் பிரிக்கவே மான் வந்திருக்கிறது!
அது வரிமானாம்!
இது திரங்கிகளின் வேலையாகத்தான் இருக்கும்!
வரிமான்கள் மலையில்தான் உண்டு!
ஒருவன் மரத்து மேலே இருந்திருப்பான்.
ஒருவன் மரத்தடியில் மானோடு இருந்திருப்பான்!
இது மலைக் கழுகு இறகு!
சந்தேகமேயில்லை! இது திரங்கிகள் வேலைதான்!

அப்போது ஒரு அம்பு பாய்ந்து வந்தது!
தலைவருக்குக் கடிதம்...
ரெக்ஸ் பற்றி இருக்குமோ?
ரெக்ஸ் கடிதம்தான். அத்துடன் அவனது தலைமுடி!
முதலில் முடி! அடுத்துத் தலை!! கட்டாயப்படுத்தி என்னை எழுதச் சொன்னார்கள்.
ரெக்ஸ்.

காட்டு மக்கள் உங்கள் துணைக்கு வருவார்கள்!
யாரும் வேண்டாம்! அது போராக மூண்டுவிடும்!!

ரெக்சை மீட்க வேண்டும்! வேகமாகப் போ!

மோரிகளுக்கு நீங்கள் உதவியதால், திரங்கிகள் பழிவாங்குகிறார்கள் போலிருக்கிறது!
இருக்கும்!
ரெக்ஸ் மூலம் உங்களைப் பிடிக்க முயற்சிக்கிறார்கள்!
நான் கிளம்பி விட்டேன்!
ரெக்சைக் காப்பாற்றி அழைத்து வருகிறேன்!
அதுவரை திரங்கிகள் அவன் தலையை வெட்டாமல் இருப்பார்களா?
அதுதான், நான் தாமதிக்காமல் புறப்படுகிறேன்! நீயும் கவனம்! திரங்கிகள் பயங்கர அரக்கர்கள்!

பச்சைக் கறி, தின்னுடா!
நீயே தின்னு!
எதிர்த்தா பேசுற?
ரெக்ஸ் சிங்கக்குட்டி!

இவன் தலையை இப்பவே வெட்ட...ணும்!
பொறு! இவனை வைச்சுத்தான் மாயாவியைப் பிடிக்கணும்!!

ரெக்சுக்கு ஜூடோ தெரியும்!

கராத்தேயும் கற்றிருக்கிறான்!
ஆ...!

அவன் தலையை வெட்டிடாதே! மாயாவி வரும்வரை இருக்கட்டும்!
எங்கிட்டயா எகிர்ற?

!
இவன் தலையை வெட்டிவிட்டுத்தான் வேறு வேலை!
திடீர் என்று ஒரு குண்டு பாய்ந்தது!
ஆ...!
மாயாவி வந்து விட்டார்!

சரணடை...! இல்லையென்றால், இவன் தலையை வெட்டி விடுவோம்!!
மாமா...
அப்படி வா வழிக்கு!
ரெக்சைக் காப்பாற்ற வேண்டும்!
இருவரையும் பிடித்துக் கட்டினார்கள்.
மாமா! என்ன செய்வார்கள்?
தலையை வெட்டுவார்கள்!

என்னவோ சொல்லுகிறானே?
என் தலையை முதலில் வெட்டப்போறானாம்!
இவன் தலையை வெட்டிவிட்டால், நமக்கு எதிரிகளே இல்லை!
ஆனால், யாரும் நம்பமாட்டார்கள்!
நம்ம எதிரிகள் முன்னே இவனை நிறுத்த வேண்டும்!
எதிரிகளா... தூசிகள்!

இரங்கிகளிடம் குழப்பம் ஏற்பட்டது.
மாமா, யார் இவர்கள்?
அடிமைகளாகப் பிடிக்கப்பட்ட ஊகன்கள்!

முகமூடியைப் பிடித்து விட்டார்களே?
அவரது தலையை வெட்டிவிட்டால், நமக்கு விடுதலையே கிடைக்காது!

அவரை விடுவித்தால் என்ன?
நமக்கே காலவிலங்கு பூட்டியிருக்கிறார்கள்!
அவன் தலையை வெட்டு!
முகமூடிக்கு சாவு இல்லை! அவர் தலையை எப்படி வெட்ட முடியும்?
வெட்டு! அவருக்கு சாவு இருக்கா இல்லையானு பார்த்திடுவோம்!

இவர் உண்மையான மாயாவி என்றால் சாகமாட்டார்!
செத்தால் இவர் மாயாவி இல்லை!
நல்லா சண்டை போடுங்கள்!
தெய்வமகன் சொல்லட்டும்!!
நம்மை எங்கே கொண்டு போகிறார்கள்?
தெரியல!

மண்டியிடு! அவர் தெய்வ மகன்!!
சீ! இவனா தெய்வமகன்!
உஷ்!
அடடே... அகப்பட்டானா... ஹ...ஹ...ஹா... இவன் காட்டில் நடமாடும் வேதாளம்!

நான் யார் தெரியுமா? தெய்வமகன்! கடவுளின் தூதன்!
பைத்தியம்! ஏமாற்றுக்காரன்!!
வேதாளமே! உன் இடத்தை விட்டு இங்கே ஏன் வந்தாய்?

என் மகனைக் காப்பாற்ற!
இந்தக் காட்டுக்கே நான் மன்னன் ஆகவேண்டும்! நீ என் காலில் விழவேண்டும்!
இந்தப் பயல் தலை பலிபீடத்தில் உருள வேண்டும்!

தெய்வத் திருமகனே! அவன் தலையை வெட்டிவிடவா?
பொறு! முதலில் வேதாளம் கதையை முடிக்க வேண்டும்!
பாறையைக் குடைந்து, அதில் வேதாளத்தைப் புதைக்க வேண்டும்!
பைத்தியக்காரன்! காட்டுவாசிகளுக்கு பைத்தியக்காரத்தனமும் ஒரு தெய்வீகச் செயலே!

தப்பிக்க என்ன வழி, மாமா?
கொஞ்சம் பொறு!
மாயாவியைப் புதைக்கக் குழி தோண்டும் வேலை நடந்தது!
என் பூட்சு உனக்கு எட்டுமா?


அடுத்த நாளும் குளிக்கக் கிளம்பினார்கள்.
உன்னை வெல்ல முடியாது, ரெக்ஸ்!
இன்று நீச்சல் போட்டி வைப்போமா?
வழியில் ஒரு மான் வந்தது!
மானைப் பிடிக்கச் சிங்கம் சென்றது!
கட்டனோ! போகாதே!
திடீர் என்று குரங்குகள்...
ஆ...!
அய்யோ...!

தகுந்த நேரத்தில் பயன்படுத்திக்கொள்!
குழி தயார்! வேதாளத்தை இழுத்து வா!!
நம்மைப் பிடித்துப் போக ஆள் வருகிறது! கவனமா இரு!!

மாயாவி ஒரு குத்துவிட்டார்!
ஆ...!
அவனைப் பிடி!
மாயாவி எதிரிகளைத் தூக்கிப் பந்தாடினார்!

கத்திகளைக் கீழே போடுங்கள்!
போடாவிட்டால், உங்க தெய்வமகனுக்கு சாவுதான்!
தெய்வமகனே! சீறி எழுங்கள்! அவனைக் கொல்லுங்கள்!

கீழே போடு! தெய்வமகனான நான் கட்டளையிடுகிறேன்!
ஊகன்களே! கத்தியை எடுங்கள்! உங்களை விடுவித்துக் கொள்ளுங்கள்!!
திரங்கிகளிடம் அடிமைகளாக இருந்த ஊகன்கள் விடுதலையானார்கள்!
விடுதலை... விடுதலை...

ஊகன்கள் கையில் கத்தி எடுத்தார்கள்!
திரங்கி எமனே! நாங்கள் தூசிகளா? இப்பப் பார்த்தாயா?
நிறுத்துங்க! அவர்களை ஒன்றும் செய்துவிடாதீர்கள்!
கொலைக்குக் கொலை சரியாகாது! சமாதானமாக வாழ்வோம்!

கொலைகாரர்களுக்குத் தண்டனை வேண்டாமா?
அதைத் தலைவர் முடிவு செய்வார்!
எல்லோரையும் பிடித்துக்கொண்டு மாயாவி நடந்தார்.
திரங்கன்கள் ஏன் எதிரிகளின் தலையை வெட்டினார்கள்?
எல்லாம் இந்த தெய்வமகனின் ஆணைதான்!
பார்த்த மக்கள் மகிழ்ச்சி அடைந்தார்கள்!
திரங்கன்கள் கூட்டத்தோடு பிடிபட்டுவிட்டார்கள்!

செய்தி வேகமாகப் பரவியது!
கிரங்கன்கள் எல்லோரும் பிடிபட்டார்கள்!
கிராமத் தலைவர் முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார்கள்!
இந்தக் கொடியவர்களை என்ன செய்வது?
இவர்களால் பாதிக்கப்பட்ட ஊகன், மோரிகள் அதைத் தீர்மானிக்கட்டும்!
பழிக்குப்பழி என்கிற காலம் மாறிவிட்டது
இவர்கள் உழைத்துப் பிழைக்கப் பழகட்டும்!

திரங்கன்கள் பிடிபட்டதால், காட்டில் அமைதி திரும்பியது. அதற்குத் தங்கக் காளையே காரணம்!


மாயாவி குகைக்குத் திரும்பினார்.
திரங்கன்கள் என்ன செய்கிறார்கள்?
மரம் வெட்டப் பழகுகிறார்கள்!

ராணி சின்டிகேட் சார்பில் வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்; ர. பாஸ்கரன், சின்டிகேட் ஆர்ட் பிரஸ், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. ஆசிரியர்: அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.

அடுத்த காமிக்ஸ்
ராணி காமிக்ஸ்
ஜேம்ஸ் பாண்டு 007
சாகசத்தில்
காபரே ஆட்டக்காரி
ரூ.5

Regd.with the Registrar of Newspaper
for India under No. 42576/84 – ISSN 0971-8567

March 1, 2003.

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

தினத் தந்தி

வழங்கும்

வெள்ளி தோறும்

சிறுவர் தங்கமலர்

- ★ அட்டையில் உங்கள் குழந்தையின்படம்
- ★ புராண படக்கதை
- ★ துப்பறியும் படக்கதை
- ★ குழந்தைகளுக்கு அறிவியல் தகவல்கள்
- ★ மாயாஜால சிறுவர் தொடர்கதை
- ★ சிறுகதைகள்
- ★ பொழுதுபோக்கு அம்சங்கள், புதிர்கள், விடுகதைகள்

தினத்தந்தியுடன்

வெள்ளி தோறும் வண்ண புத்தகம் இலவசம்

உங்கள் கடைக்காரரிடம் கேட்டு வாங்குங்கள்